# கற்பகம் KATPAKAM திங்கள் இதழ்

விலை ரூபா 10/-

மலர்–02 ஜனவரி–2009 இதழ்–15


### குறளமுதம்–15

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.

**அதிகாரம்–2 – அறத்துப்பால் – வான் சிறப்பு**

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்று ஆங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை"

*பெய்யாது நின்று மக்களைக் கெடுப்பதும், அங்ஙனம் கெட்டவர்க்குத் துணையாகப் பெய்து அவரை வாழ்விப்பதும் ஆகிய எல்லாம் வல்லது மழை.*

## பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்கள்

# கூட்டுறவு சபையுடனான சகல தொடர்புகளையும் இடைநிறுத்தும்!

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையில் அண்மையில் இடம்பெற்ற சபையின் செயலாளர் நியமனம் சம்பந்தமாக சமாசத்தின் அங்கத்துவ சங்கம் ஒன்றின் பணியாளர் அப்பதவிக்கு தெரிவு செய்யப்படாமை குறித்து சமாசம் தனது அதிருப்தியை கூட்டுறவுச் சபைக்கு கடிதமூலம் தெரிவித்துள்ளதுடன் அதற்குரிய நிவாரணம் கிடைக்கும் வரை சபையுடனான சகல தொடர்புகளையும் அங்கத்துவ சங்கங்கள், கொத்தணிகள் மற்றும், சமாசம் என்பன இடைநிறுத்தம் செய்வதென சமாசத்தின் சிறப்புக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

இக்கூட்டததில் ப.தெ.வ.அ.கூ. சங்கங்களினதும் கொத்தணிகளினதும் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு,

1. செயலாளர் நியமனம் தொடர்பாக சமாசத்திற்கு விளக்கங்கள் தேவைப்படுவதால் செயலாளர் வெற்றிடம் நிரப்புவது தொடர்பாக யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாக சகல அறிக்கைகள் அனைத்தையும் இக்கடிதம் கிடைத்து ஒரு வார காலத்திற்குள் எமக்கு அனுப்பி வைக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

2. மேற்குறித்த கோரிக்கைகளிற்கான பதில் கிடைக்கும் வரைக்கும் கூட்டுறவுச் சபையுடனான சகல தொடர்புகளையும் சங்கங்கள் மேற்கொள்வதனை நிறுத்திக்கொள்ள வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பொங்கல் வாழ்த்துக்கள்!



அங்கத்தவர்கள், பணியாளர்கள், மற்றும் அனைத்து கூட்டுறவாளர்களுக்கும் "கற்பகத்தின்" இதயம் கனிந்த பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

2009ம் வருட வர்ண நாட்காட்டி உள்ளே

## பருத்தித்துறை ப. தெ.வள அ.கூ. சங்கமும் பணியாளர் சி.க.கூ.சங்கமும் இணைந்து நடத்திய கௌரவிப்பு விழா!

பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் பணியாளர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமும் இணைந்து நடத்திய இந் நிகழ்வானது வழமைபோல் இம்முறையும் நடத்தப்படுவது பாராட்டுக்குரியதொரு நிகழ்வாகும் என சங்கத்தின் தலைவர் திரு.கி.சிவகுமார் தெரிவித்தார்.

பருத்தித்துறை ப.தெவ.அ.கூ.சங்கமும் பணியாளர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமும் இணைந்து சங்க மண்டபத்தில் நடத்திய வருடாந்த கௌரவிப்பு விழாவினை தலைமையேற்று நடத்திய சங்கத்தின்




தலைமையுரையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது,

சங்கம் தற்போது முன்னெடுத்து வரும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு சகலரும் ஒத்துழைப்பு வ்ழங்க முன்வரவேண்டும் என்று அனைவரையும் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திரு.சி.சிறிதரன் உரையாற்றுகையில் கூறியதாவது,

இச்சங்கமானது பலதரப்பட்ட முன்னேற்றகரமான செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றபோதும், தவிர்க்க வேண்டிய பல விடயங்கள் இருப்பதாக தெரிவித்த அவர், அவற்றை விலக்கிக் கொள்வதற்கு சங்கம் அக்கறையுடன் செயற்பட வேண்டும் என்றும், அண்மைக் காலத்தில் இச்சங்கத்தின் பல கிளைகளை மூடுமாறு பல்வேறு தரப்புக்களிடம் இருந்தும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டமையையும் தான் அறிந்திருப்பதாகவும் சுட்டிக்காட்டிய அவர், இச்செயற்பாடுகளின் பின்னால் சில அங்கத்தவர்களின் பிள்ளைகள் இருந்து செயற்பட்டமை கவலையளிப்பதாகவும், தொழில்ரீதியாக அங்கத்தவர்கள் சங்க ஈடுபாட்டில் முழுமையாக ஈடுபட்டிருக்க வேண்டும் என்றும் அங்கத்தவர்களைக் கேட்டுக்கொண்டார்.

வடமாகாண ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் சமாசப் பொதுமுகாமையாளர் திரு.ஜே.பி. குணரட்ணம் பேசுகையில் கூறியதாவது,

அங்கத்தவர்கள் இளைப்பாறிய பின்னர் வருமான வழிகளற்ற நிலையில், எதிர்கொள்ளுகின்ற அத்தியாவசிய தேவைகள் மற்றும் பொருளாதார தேவைகளை நிறைவேற்றுவதில் உள்ள சிரமங்களைகளையும் பொருட்டும் தமது நீண்டகால சிந்தனையை நிறைவேற்றி அங்கத்தவர்களும் அவர்சார்ந்த குடும்பமும் ஓய்வு காலத்தில் மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ வேண்டுமென்ற நோக்கிலேயே தம்மால் அங்கத்தவருக்காக ஓய்வூதியத்திட்டம் முன் வைக்கப்பட்டது. இத்திட்டம் நடைமுறைப்படுப்படுத்தப்படும்போது

(2ம் பக்கம் பார்க்க)

"கணக்கிலா பயன்தரு கற்பகதருபோல் கற்பகமும் பயன் தரும்"

### சிந்தனைத்துளி

"பிறர் நலன்பெற்று வாழ எமது சேவை அவர்களுக்கு கிடைக்க வேண்டும்"!
-அறிஞர்-

## கற்பகக்கரு

### ஓய்வூதியத் திட்டம்– 2

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அங்கத்துவ சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கிவருகிறது. இத்தகைய ஓய்வூதியத்தை சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கும் வழங்குவதற்கு சங்கங்கள் முன்வந்து அதனை சமாசத்தின் மூலம் வழங்க இருக்கின்றன.

கூட்டுறவு அமைப்பில் பல்வேறு உதவிகளை சங்க அங்கத்தவர்களுக்கு வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி வரும் இச்சங்கங்கள் பணியாளர்களுக்கும் ஓய்வூதியத்தை வழங்க முன்வந்திருப்பது ஏனைய கூட்டுறவு அமைப்புக்களுக்கு ஒரு முன்மாதிரியான செயற்பாடாக கருதவேண்டி உள்ளது.

பணியாளர்களின் மாத வேதனத்தில் ஒருதொகைப் பணத்தை சங்கங்கள் அறவீடு செய்து அதனை சமாசத்திற்கு அனுப்புவதன்மூலம் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தினால் சுமார் ஐநூறுக்கு மேற்பட்ட பணியாளர்கள் நன்மைபெற உள்ளனர். இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்போது கூட்டுறவுத் திணைக்களத்தின் அனுசரனை சமாசத்திற்கு தேவையாகவுள்ளது. திணைக்களம் இதற்கான அனுமதியை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

அரச நிறுவனம் ஒன்றினைப்போல் செயற்பட்டுவரும் ப.தெ.வ.அ.கூ.சங்கங்கள், கொத்தணிகள், சமாசம் என்பன இவ் ஓய்வூதியத் திட்டத்தை, இச்சங்கங்களின் பணியாளர் நலன்புரி சங்கத்தின் கோரிக்கையை ஏற்று நடைமுறைப்படுத்த முன்வந்துள்ளமை பாராட்டுக்குரியதொரு செயலாகும்.

சமூகத்தின் பல்வேறு தேவைகளை காலத்திற்கு காலம் பூர்த்தி செய்துவரும் இச்சங்கங்களின் செயற்பாடுகள் அரச உயர் அதிகாரிகளின் பாராட்டுதல்களுக்கு உள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அங்கத்தவர்களின் ஓய்வு காலத்தில் அவர்களது வாழ்வை வளம்படுத்துவதற்கு அவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் எந்த வகையில் அவர்களுக்கு ஆறுதலை கொடுக்கின்றதோ, அதே ஆறுதலை பணியாளர்களின் ஓய்வு காலத்தில் அவர்களுக்கும் வழங்கும் என்பது திண்ணம்.

இவ் ஓய்வூதியத் திட்டத்தை வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம் நடைமுறைப்படுத்துவதற்கு அங்கத்துவ சங்கங்கள் தமது மனப்பூர்வமான விருப்பத்தை தெரிவித்திருப்பது உண்மையில் பாராட்டுதற்குரிய ஒரு விடயமாகும்.

இந்நிலையில் பணியாளர்கள் அவர்களுக்கு நன்றி, விசுவாசம் உடையவர்களாக இருக்க வேண்டும் என கற்பகம் வேண்டுகிறது.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"

-ஆசிரியர்-

### பருத்தித்துறை 1ம் பக்க தொடர்ச்சி

தான் அங்கத்தவர்கள் சங்கத்திற்கு வழங்கிய ஒத்துழைப்பினை அறிய முடிகிறது எனவும் தெரிவித்த அவர், இன்று கௌரவம் பெறுவோருக்கு தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

வடமராட்சிக் கொத்தணியின் பொது முகாமையாளரான திரு.கி.பூபாலன் பேசுகையில், இச்சங்கத்தின் நடவடிக்கைகளையும் அதன் வளர்ச்சியினையும் கண்டு தாம் பெருமிதம் அடைவதாகவும் சங்கம் அண்மைக்காலமாக சிறப்பான பல நல்ல சேவைகளை முன்னெடுத்து வருவதனையும் கடந்த ஆண்டு அங்கத்தவர்கள், பணியாளர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடி விநியோகித்தமை புதிய கட்டடம் திறந்து வைத்தமை, அண்மையில்கூட பருத்தித்துறை அரசினர் மருத்துவமனையின் புனரமைப்புகென ரூபா 25,000 அன்பளிப்பு செய்தமை போன்ற விடயங்களைச் சுட்டிக்காட்டினார்.

பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கத்தின் தலைவர் திரு.த.சந்திரதாஸ் தமதுரையில் இன்றைய நாள் தமது வாழ்நாளில் மிகவும் முக்கியமானதொரு நாள் எனவும், கௌரவிப்பு விழா என்பது எப்போதும் நடக்கின்ற ஒரு நிகழ்வேயாயினும் இங்கு சங்கத்தின் அங்கத்தவர்கள் கௌரவிக்கப்படுவது தன்னால் என்றுமே மறக்கப்பட முடியாதது எனவும், சங்கத்தின் வளர்ச்சியில் அங்கத்தவர்கள், பணியாளர்கள், பணித்தொகுதி என்பன முற்றாக இணங்கி நல்ல எதிர்காலத்தினை நோக்கி நகருவதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளதுடன், கல்விசார் நடவடிக்கையாக புலமைப்பரிசில் பெற்ற மாணவர்களைக் கௌரவிப்பதும் வரவேற்கக்கூடிய செயற்பாடு எனக்கூறினார்.

மேலும் இந்நிகழ்வில் பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளர் திரு.நா.வைத்தீஸ்வரன், கரவெட்டி ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் தலைவர் திரு.சு.சின்னராசா, பொதுமுகாமையாளர் திரு.தா.இராசரத்தினம் ஆகியோராலும் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

கௌரவிக்கப்பட்ட அங்கத்தவர்கள், பணியாளர்கள், புலமைப்பரிசில் பெற்ற மாணவன் ஒருவர் உட்பட மொத்தம் 21 பேருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் முன்னாள் தலைவர்களுக்கு நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

மேலும் பணியாளர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தால் இளைப்பாறிய தமது உறுப்பினர்களுக்கு தங்கச்சங்கிலி, தங்க மோதிரம் பரிசாக வழங்கிக் கௌரவிக்கப் பட்டது.

## கிராமிய வங்கி புனரமைப்பு



சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் கட்டடத்தில் இயங்கிவந்த கிராமிய வங்கி நவீனமாக புனரமைப்பு செய்யப்பட்டு, சங்கத்தின் தலைவர் திரு.கி.பூபாலசிங்கம் அவர்களினால் கடந்த 02-01-2009 வெள்ளிக்கிழமை மங்கள கரமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் சங்கத்தின் இயக்குனர்சபை உறுப்பினர்கள், பணியாளர்கள், கொத்தணிப் பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

### பிலிப்கா.. 6ம் பக்க தொடர்ச்சி

பிலிப்கா தனக்கு ஒரு சோடி இறக்கைகள் செய்து கொண்டான்.

கொல்லன் பட்டறையில் இருந்து அப்பொழுதுதான் பாபா-யாகா ஓடி வந்து வேகம் வேகமாய் மீண்டும் அத்தி மரத்தைத் தறிக்க முற்பட்டாள். அவள் வெட்டிய வேகத்தில் சிராய்த் துகள்கள் சிதறி நாற்றிசையும் பறந்தோடின.

மரத்திலிருந்த பிலிப்கா பறப்பதற்கு முயன்றான். அவனால் முடியவில்லை. மரம் நன்றாகச் சரிந்து விழுகின்ற நிலையில் இருந்தது. அப்பொழுது மீண்டும் ஒரு திரள் வாத்துக்கள் பறந்து வந்தன. அவற்றைப் பார்த்து பிலிப்கா-

"வாத்துக்களே, வாத்துக்களே, நான் பறப்பதற்கு உதவுங்களேன், என்னை ஆபத்திலிருந்து காப்பாற்றுங்களேன்!" என்றான்.

உடனே வாத்துக்கள் தமது கால்களால் அவனைத் தூக்கி சற்று உயரத்தில் விட்டன. உடனே பிலிப்கா பறக்கத்தொடங்கினான்.

இதைப்பார்த்துவிட்டு, திகைத்து நின்ற பாபா-யாகாவின்மேல் அத்திமரம் விழுந்தது. அதனுள் அகப்பட்ட பாபா-யாகா இறந்தாள்.

காட்டு வாத்துக்களுடன் பிலிப்கா பறந்து வருவதைக் கண்ட அவனுடைய தாயும் தந்தையும் அளவிலா ஆனந்தமடைந்து அவனைக் கட்டித் தழுவி, இன்சுவை உணவளித்து அகமகிழ்ந்தனர்.

முற்றும்

## கூட்டுறவு!

ஒருதாய் வயிற்றுப்பிள்ளைபோல் எம்மை
ஒருங்கிணைத்திடும் கூட்டுறவு
ஒற்றுமையாய் பாரினிலே நாம் உயர
ஓர் அச்சாணியாய் அமைந்திடும் கூட்டுறவு
ஜாதி மத பேதமற்ற ஜனநாயகத்தின்
ஒளிவிளக்காம் கூட்டுறவு!

வானவில்லின் திறமதனை இலட்சணமாய்
கொண்டது நம் கூட்டுறவு
வையகத்தில் ஒற்றுமையின் சிகரமாய்
ஒளி வீசிடும் கூட்டுறவு
சகோதரத்துவத்துடனும் சமத்துவத்துடனும்
எம்மை வாழவைக்கும் கூட்டுறவு

ஓய்வூதியம் காப்புறுதி என்றும்
பல்வகை திட்டங்களை
தன்னகத்தே கொண்டு தரணியிலே
நாம் உயர வழி சமைத்திடும் கூட்டுறவு
மக்களின் வாழ்க்கைத் தரமதனை
ஏற்றம் என்னும் பாதையிலே
வழி நடத்திடும் கூட்டுறவு
பாரினிலே பல்வகைக் கிளைகளாக பரிணமித்து
வெற்றிநடை போடுகிறது கூட்டுறவு

எங்கெங்கு காணினும் சக்தியடா
எதிலும் எம் கூட்டுறவில் வெற்றியடா
வாழ்க எம் கூட்டுறவு
வளர்க கூட்டுறவின் மகத்தான சேவை

—செல்வி சற்குணம் சங்கீதா—
பரு.ப.தெ.வ.அ.கூ.சங்கம்.

## உங்களுக்குத் தெரிகிறதா?

மாடு பருகிவிட்டு
மணல்மேட்டில் போட்டுவிட
ஊன்றி உடம்பெடுத்த உத்தமனை
தோண்டி எடுத்து
தோலைக் கழற்றிவிட்டு
தலை வாலைத் தறித்தெடுத்து
உப்பிட்டு
உடலை வேகவைத்து
உலர்த்திய பின்
ஊரைவிட்டு அனுப்புகின்றோம்
தெரிகிறதா உங்களுக்கு?

பொறுக்கி எடுத்தான்
கறிக்கு உதவாக் காய்கள்
கறந்தெடுத்தான்
கரைத்தான் மாவோடு
சட்டியிலே வேகவைத்து
பெட்டியிலே வடியவைத்து
சுண்டுப் பேணியிலே அளந்து
சுவைப்பதற்காய் விற்கின்றான்
அது என்ன புரிகிறதா?

இ.காந்தன்,
கோப்பாய் ப.தெ.வ.அ.கூ.ச.

## கவியின்பம்

## கதிரவனை வரவேற்போம்!

தரை மெழுகிக்கோலமிட்டு
தடி நாட்டித் தோரணமும்
தலை வாழை இலை கழுவி
தரை தனிலே கும்பமிட்டு
புதுப்பானை நாமெடுத்து
புதிர் அரிசிப் பொங்கல் இட்டு
பலகாரம் பலவகையும்
கரும்போடு கனி வகையும்
கற்பூர தீபமுடன்
கமழ்கின்ற குச்சிகளும்
கதிரவனை வரவேற்க
களிப்படைந்த கதிரவனும்
விழிப்படைவான்
விழைநிலங்கள் தனைக்காக்க!

கு.இலட்சுமி
கோப்பாய் ப.தெ.வ.அ.கூ.ச.

## விடியலைத் தேடுதே வெண்புறா!

விடியலைத்தேடுதே வெண்புறா
விழித்துக் கிடக்குதே வெண்புறா
அடிவானில் இருள் மூடிக்கிடக்குதே
அலைபாயும் மனம் ஏங்கித் தவிக்குதே!

விடியலைத் தேடும் வெண்புறா
விழித்துக் கிடப்பதெதற்கு
துடித்துக் கிடப்பதெதற்கு
துணைவனைக் காணவில்லையே—அதற்கு

சோடிப் புறா எங்கே
நாடிக் கிடக்குது மனம்
வாடிக் கிடக்குது விழிகள்
தேடிக் கிடக்குது இங்கே

அடிவானம் மெல்ல வெளுத்தது
விடிவெள்ளி அங்கே உதித்தது
அடிமனம் அன்பரைத் தேடித்
தேடி அலைந்து திரிந்தது

காலை மலர்ந்து வரும்
கவலைகள் அகன்று விடும்
வேளை நெருங்குமென மனதில்
நம்பிக்கை துளிர் விடும்

கே.எம்.தியாகராஜா,
கொடிகாமம் ப.தெ.வ.அ.கூ.ச.

## எம்மை நாமே என்றும் வளமாக்குவோம்!

உழைக்கும் வர்க்கத்தின் உரிமைக் குரலாய்
உலகில் இயங்கிடும் எங்கள் கூட்டுறவின்
உண்மை வழி நடந்து உயர்வின்படி ஏறி
நல்ல வல்ல வழி தேடி
எம்மை நாமே என்றும் வளமாக்குவோம்

எங்கள் உழைப்பால் எங்கள் வாழ்வை
என்றும் வளமாக்க ஏற்ற வழி காட்டி நிற்கும்
அன்றைய எம்மவரின் அயராது உழைப்பதுவால்
அவனியில் அவதரித்து எம்மை அரவணைத்த
எங்கள் கூட்டுறவின் ஏற்றமிகு செயற்பாட்டால்
எம்மை நாமே என்றும் வளமாக்குவோம்

எங்களால் எங்களுக்காய் உருவாக்கிய
எங்கள் கூட்டுறவால் எங்களின் வாழ்வுதனை
ஏற்றம்மிகு தோற்றம்பெற ஏற்றவழி அனைத்தும்
கண்டு எம்மை நாமே என்றும் வளமாக்குவோம்

சமூக மேம்பாடு எனும் கூட்டுறவின் சக்திமிகு
கொள்கையினை
தக்கபடி பயன்படுத்தி எங்கள் சமூகம் உயர்ச்சிபெற
எம் இனிய கூட்டுறவு ஏற்றி வைத்த கொள்கைகளை
இங்கிதமாய்ப் பயன்படுத்தி
எம்மை நாமே என்றும் வளமாக்குவோம்

அ.சின்னராசா,
தலைவர்,
கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.ச.

“நெடுங் காலத்திற்கு முன் ஒரு கணவனும் மனைவியும் மொஸ்கோ எனும் கிராமத்தில் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்குப் புத்திர பாக்கியம் இல்லை. தொட்டிலில் இட்டு ஆட்டவும் பிள்ளை இல்லையே என்று மனைவி எந்நேரமும் துயருற்று வருந்தினாள்.

ஒரு நாள் கணவன் காட்டுக்குச் சென்று பூவரச மரத்திலிருந்து ஒரு துண்டுக் கட்டையை வெட்டிச் சீவி வீட்டுக்கு எடுத்துச் சென்று மனைவியிடம் கொடுத்தான்.

“இந்தா, இதைத் தொட்டிலில் இட்டு ஆட்டு” என்றான்.

அதேபோல் மனைவி அந்த மரக்கட்டையைத் தொட்டிலில் இட்டு ஆட்டினாள்.

“பிள்ளைக் கனியமுதே, கண்ணுறங்கு! வெளுத்த மேனியும் கறுத்த கண்ணும் கொண்ட என் கண்மணியே, கண்ணுறங்கு!” என்று தாலாட்டுப் பாடினாள்.

முதல் நாளும் ஆட்டினாள், இரண்டாம் நாளும் ஆட்டினாள், பிறகு மூன்றாம் நாளன்று தொட்டிலினுள் பார்த்த போது, பச்சிளம் பாலகன் படுத்துறங்குவதைக் கண்டாள்!

கணவனும் மனைவியும் மட்டிலா ஆனந்தமடைந்தனர். தமது செல்வ மகனுக்கு பிலிப்கா என்று பெயரிட்டு அவனைக் கண்ணும் கருத்துமாய்க் கவனித்து வந்தனர்.




பிலிப்கா வளர்ந்து பெரியவனானதும் தன் தந்தையிடம் “அப்பா, எனக்கு ஒரு தங்கப் படகும் வெள்ளித் துடுப்பும் செய்து கொடு, நான் ஏரியில் சென்று மீன் பிடிக்க விரும்புகிறேன்” என்று வேண்டினான்.

தந்தை அவனுக்கு தங்கப் படகும் வெள்ளித் துடுப்பும் செய்து கொடுத்ததும் மீன் பிடிப்பதற்காக ஏரிக்குச் சென்றான்.

பிலிப்கா மிக மும்முரமாக மீன் பிடித்தான். இரவு பகலாய் ஏரியிலே படகோட்டிச் சென்று மீன் பிடித்தான். மீன்கள் நிறையக் கிடைத்ததால் வீட்டுக்குப் போகாமலே அவன் ஏரியிலேயே தங்கிவிடுவான். தினமும் தாய் அவனுக்குச் சாப்பாடு கொண்டு வந்து கொடுத்து வந்தாள்.

தாய் ஏரிக் கரையிலே வந்து நின்று “பிலிப்கா, என் மகனே! பாதிப் பகல் கழிந்து விட்டது, உனக்கு அப்பம் சுட்டுக்கொண்டு வந்திருக்கிறேன், வந்து சாப்பிட்டுப் பாரேன்!” என்று குரல் கொடுப்பாள்.

உடனே பிலிப்கா கரைக்கு வந்து தான் பிடித்து வைத்திருந்த மீன்களை அள்ளிக் கொடுத்துவிட்டு அம்மாவிடமிருந்து அப்பத்தை வாங்கிச் சாப்பிடுவான். பிறகு திரும்பவும் படகில் ஏரியின் நடுமையத்துக்குச் சென்றுவிடுவான்.

சூன்யக்காரி பாபா-யாகா ஒருநாள் பிலிப்காவை அவன் தாய் கரைக்கு வரும்படி எப்படிக் கூப்பிடுகிறாள் என்பதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். தானும் அதேபோலக் கூப்பிட்டுச் சிறுவனைக் கொன்றுவிடுவதென்று அவள் முடிவு செய்து கொண்டாள்.

ஒரு சாக்கையும் நெருப்பு கிளறும் கோலையும் எடுத்துக் கொண்டு அவள் ஏரிக்கரைக்கு வந்தாள்.

“பிலிப்கா, மகனே! பாதிப் பகல் கழிந்து விட்டது, நான் கொண்டு வந்திருக்கும் அப்பத்தைச் சாப்பிட வாயேன்!” என்று அவள் கூவினாள்.

தாய்தான் கூப்பிடுகிறாள் என்று பிலிப்கா தன் படகை கரைக்கு ஓட்டி வந்தான். பாபா-யாகா நெருப்பு கிளறும் கோலைப் படகில் மாட்டி இழுத்து பிலிப்காவைப் பிடித்து சாக்கில் போட்டுக் கொண்டாள்.

“ஆகா! இனி நீ மீன்பிடிப்பதைப் பார்ப்போம்!” என்று கூவினாள்.

சாக்கைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு காட்டுக்குள் சென்றாள். அவள் வீட்டுக்கு நெடுந்தூரம் நடக்க வேண்டியிருந்தது. அவளுக்குக் களைத்துவிட்டது. களைப்பாறலாமென்று உட்கார்ந்தவள் அப்படியே தூங்கி விட்டாள். சாக்கிலிருந்து பிலிப்கா மெல்ல வெளியே வந்து கனமான கற்களை எடுத்துச் சாக்கில் நிரப்பி வைத்துவிட்டு ஏரிக்குச் சென்று விட்டான்.

பாபா-யாகா விழித்துக் கொண்டதும் சாக்கு மூடையைத் தூக்கிக் கொண்டு முக்கி முனகியவாறு வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தாள்.

வீட்டுக்கு வந்ததும் தன் மகளிடம் “இந்த மீனவனை நெருப்பிலிட்டு எனக்குச் சாப்பாடு தயாரி” என்றாள்.

சாக்கைத் தரையில் கவிழ்த்து உலுக்கினாள். அதிலிருந்து வெறும் கற்கள்தான் வெளியே கொட்டின.

பாபா-யாகாவுக்குக் கடுங்கோபம் வந்தது.

“என்னையா ஏமாற்றுகிறாய்? உனக்குப் பாடம் கற்பிக்கிறேன் பார்!” என்று உச்சக் குரலில் கத்திவிட்டு மீண்டும் ஏரிக்கரைக்கு ஓடினாள்.

“பிலிப்கா, என் மகனே! பாதிப் பகல் கழிந்துவிட்டது, நான் கொண்டு வந்திருக்கும் அப்பத்தைச் சாப்பிட வாயேன்!” என்று மறுபடியும் அவள் குரல் கொடுத்து பிலிப்காவைக் கூப்பிட்டாள்.

அவளுடைய குரல் பிலிப்காவுக்குக் கேட்டதும் “உன்னை எனக்குத் தெரியும்! நீ பாபா-யாகா! நீ என் அம்மா இல்லை, என் அம்மாவின் குரல் மெல்லியதாய் இருக்கும்” என்று பதிலளித்தான்.

**ருஷ்ய நாட்டு நவரசக் கதை**

பாபா-யாகா பன்முறை குரல் கொடுத்துப் பார்த்தாள், ஆனால் பிலிப்கா கரைக்கு வரவில்லை.

“இரு நீ, இதோ வந்துவிட்டேன்! என்னுடைய குரலை மெல்லியதாக்கிக் கொண்டு வருகிறேன், பார்!” என்று அவள் தன்னுள் கூறிக்கொண்டு நேரே கொல்லனிடம் ஓடினாள்.

“கொல்லனே, கொல்லனே, என்னுடைய நாக்கைத் தட்டி மெல்லியதாக்கேன்” என்றாள்.

“சரி, நாக்கை இப்படிப் பட்டடைக் கல்லின்மேல் நீட்டி வை” என்றான் கொல்லன்.

பாபா-யாகா தனது நீண்ட நாக்கை வெளியே நீட்டிப் பட்டடைக் கல்லின்மேல் வைத்தாள். கொல்லன் தனது சம்மட்டியை எடுத்து அடியடி என்று அடித்து அதை நன்றாக மெல்லியதாக்கினான்.

பாபா-யாகா திரும்பவும் ஏரிக் கரைக்கு ஓடி வந்து மெல்லிய குரலில் “பிலிப்கா, என் மகனே! பாதிப் பகல் கழிந்துவிட்டது, நான் கொண்டு வந்திருக்கும் அப்பத்தைச் சாப்பிட வாயேன்” என்று கூவினாள்.

அவளுடைய மெல்லிய குரல் காதில் விழுந்ததும் தன் தாய் கூப்பிடுகிறாள் என்று பிலிப்கா நினைத்தான். படகை ஓட்டிக் கொண்டு கரைக்கு வந்தான். பாபா-யாகா உடனே அவனைப்பிடித்துச் சாக்கில் போட்டுக் கொண்டாள்.

“இனி நீ என்னை ஏமாற்ற முடியாது!” என்று அவள் ஆனந்தப்பட்டுக்கொண்டாள். இம்முறை இடை வழியில் களைப்பாறாமலே சிறுவனை நேரே வீட்டுக்குத் தூக்கிச் சென்றாள். சாக்கை உதறி அவனை வெளியே தள்ளி, தன் மகளிடம்-

“திருட்டுப் பயல், இதோ திரும்பவும் பிடித்து வந்திருக்கிறேன்! கணப்பு அடுப்பை மூட்டி இவனைப் போட்டு வாட்டி வதக்கி எனக்குச் சாப்பாடு தயார் செய்!” என்றாள்.

இதைச் சொல்லிவிட்டு அவள் வீட்டை விட்டு வெளியே போனாள்.

அவளுடைய மகள் கணப்பு அடுப்பை மூட்டியபின் ஒரு மண் வெட்டியை எடுத்து வந்து “இதில் படுத்துக்கொள், உன்னை நான் அடுப்புக்குள் போட வேண்டும்” என்று பிலிப்காவிடம் கூறினாள்.

பிலிப்கா கால்களை உயரத் தூக்கியவாறு மண்வெட்டியில் படுத்துக்கொண்டான்.

“அப்படி அல்ல!” என்று பாபா-யாகாவின் மகள் கத்தினாள்.

“காலை மேலே தூக்கிக் கொண்டு படுத்திருந்தால் எப்படி உன்னை அடுப்புக்குள் போடுவேன்!” என்றாள்.

பிலிப்கா உடனே கால்களைக் கீழே தொங்குமாறு விட்டுக்கொண்டான்.

“இப்படியும் அல்ல!” என்று பாபா-யாகாவின் மகள் மீண்டும் கத்தினாள்.

“பிறகு எப்படியாம்? நீ படுத்துக் காட்டேன்!” என்றான் பிலிப்கா.

“முட்டாள் பையனாய் இருக்கிறாயே! இதோ பார், இப்படிப் படுத்துக்கொள்!” என்று அவள் மண்வெட்டியின்மேல் சுருண்டு படுத்துக்கொண்டாள்.

உடனே பிலிப்கா மண்வெட்டியைத் தூக்கி பாபா-யாகாவின் மகளை எரியும் அடுப்பினுள் வீசினான். பிறகு அடுப்புக் கதவை மூடி, அவள் வெளியே குதித்துவிடாதபடி பாபா-யாகாவின் நெருப்பு கிளறும் கோலை அதில் வைத்து அழுத்தினான்.

உடனே குடிசையிலிருந்து வெளியே ஓடினான். சரியாக அதே நேரத்தில் பாபா-யாகா குடிசையை நோக்கி நடந்து வருவதைப் பார்த்தான். இலைகள் அடர்ந்த உயரமான ஒரு அத்தி மரத்தின்மேல் தாவியேறி உச்சியில் அதன் கிளைகளிடையே ஒளிந்துகொண்டான்.

பாபா-யாகா குடிசைக்குள் சென்றதும் வறுபடும் இறைச்சியின் வீச்சம் அவள் மூக்கைத் துளைத்தது. அவசரமாய் அடுப்பைத் திறந்து இறைச்சியை வெளியே எடுத்து உண்டுவிட்டு எலும்புகளை வெளிமுற்றத்தில் எறிந்தாள். ஓடி வந்து அந்த எலும்புகள்மீது விழுந்து புரண்டு,

“இந்த எலும்புகள்மீது வந்து விழுந்தேனே, உருண்டு புரள்கிறேனே! பிலிப்காவின் ஊனை உண்டேனே, இவன் உதிரம் குடித்தேனே!” என்று கூவினாள்.

பிலிப்கா அவனுடைய மறைவிடத்தில் இருந்தபடி அவளுக்குப் பதில் குரல் கொடுத்து,

“இந்த எலும்பின்மீது விழுந்தாயே, உருண்டு புரள்வாயே! உன் மகளின் ஊனை உண்டாயே, அவள் உதிரம் குடித்தாயே!” என்றான்.

அவன் சொன்னதைக் கேட்டதும் பாபா-யாகா ஆத்திரம் தாங்காமல் ஆடிக்குதித்துவிட்டு அந்த அத்தி மரத்திடம் ஓடினாள். பற்களால் அதைக் கடித்து அரிக்கத் தொடங்கினாள். நெடுநேரம் ஆத்திரமாய் அரித்துக் கொண்டே இருந்தாள். ஆனால் அவள் பற்கள் உடைந்தனவே தவிர மரம் சிறிதும் அசையவில்லை.

(5ம் பக்கம் பார்க்க)

# நிகழ்வுகளின் நிழல்கள்

## பருத்தித்துறை ப.தெ.வ.அ.கூ.சங்க கௌரவிப்பு விழாவின்போது..



பருத்தித்துறை ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் தலைவர் சி.சிவகுமார் புலமைப்பரிசில் சித்தியெய்திய மாணவன் ஒருவருக்கு பரிசில் வழங்கி கௌரவிக்கிறார்.



பட்டதாரி ஆசிரிய நியமனம் பெற்ற பருத்தித்துறை ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் முன்னாள் தலைவர் த.தேவகுமார் பரு.ப.நோ.கூ.ச.தலைவர் அவர்களால் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்படுகிறார்.



சங்கத்தின் முன்னாள் தலைவர் க.நாகேந்திரன் அவர்க ளுக்கு சமாசப் பொதுமுகாமையாளர் ஜே.பி.குணரட்ணம் அவர்கள் பரிசில் வழங்கிக் கௌரவிக்கின்றார்.

## சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ.சங்க நிகழ்வின்போது ....



சங்கத்தின் நவீன கிளை நிலையத்திறப்பு விழாவின்போது பொதுமுகாமையாளர் ம.ஞானசேகரம் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.



நவீன கிளை நிலையத்தினை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் வ.பிரபாகரன் அவர்கள் நாடா வெட்டித் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.



பனியாளர் நலன்புரிச் சங்கத்தால் நடத்தப்பட்ட பிரிவுபசார விழாவின்போது ஓய்வுபெற்ற பணியாளர் கௌரவிக்கப் படுகின்றனர்.

**பிலிப்கா..** **3ம் பக்க தொடர்ச்சி**

பிறகு அவள் கொல்லனிடம் ஓடினாள்.

"கொல்லனே, கொல்லனே, சீக்கிரமாய் எனக்கு உருக்குக் கோடரி செய்து கொடு! இல்லையேல் உன் குழந்தைகளைக் கொன்று தின்றுவிடுவேன்!" என்று கத்தினாள்.

பயந்துபோன கொல்லன் அவளுக்கு உருக்குக் கோடரி செய்து தந்தான்.

கோடரியை எடுத்துக்கொண்டு பாபா-யாகா அவசரமாக அத்திமரத்திடம் ஓடி வந்து வேகம் வேகமாய் அதன் அடியை வெட்ட ஆரம்பித்தாள்.

"மரத்தைவிட்டுப் பாறையை வெட்டு!" என்று பிலிப்கா கூறினான்.

"பாறையை அல்ல மரத்தை வெட்டு!" என்றாள் பாபா-யாகா.

மீண்டும் பிலிப்கா "மரத்தைவிட்டுப் பாறையை வெட்டு நீ" என்றான்.

உடனே கோடரி ஒரு பாறையில் அடிபட்டு கூர்முனை தெறித்து மழுங்கிவிட்டது.

பாபா-யாகா வெறிகொண்டு கூச்சலிட்டாள். பிறகு கோடரியைக் கூர்மையாக்குவதற்காக கொல்லனிடம் அதை எடுத்துக்கொண்டு ஓடினாள்.

பிலிப்கா எட்டிப் பார்த்தான். அத்திமரம் ஒரு பக்கமாய் சாய்ந்து நிற்பதைக் கண்டான். பாபா-யாகா அதன் அடிப்பகுதியைப் பெருமளவுக்கு வெட்டித் தள்ளி விட்டாள். அவள் திரும்புவதற்குள் பிலிப்கா இங்கிருந்து தப்பியோடி விட வேண்டும்.

அப்பொழுது திரளாய்க் காட்டு வாத்துக்கள் பறந்து வந்தன.

"வாத்துக்களே, வாத்துக்களே, கூச்சல் வேண்டாம்! தலைக்கொரு இறகு போட்டுச் செல்லுங்கள்" என்று அவன் அவற்றிடம் கேட்டான். "உங்களுடன் சேர்ந்து நான் என் தாய் தந்தையிடம் பறந்து செல்வேன், உங்களுக்கு சன்மானம் தருவேன்" என்று வாக்களித்தான்.

ஒவ்வொரு வாத்தும் அவனுக்கு ஓர் இறகை அளித்துச் சென்றது. இந்த இறகுகளைச் சேர்த்து பிலிப்கா தனக்குப் பாதி இறக்கை செய்து கொண்டான்.

காட்டு வாத்துக்களின் இரண்டாவது திரள் பறந்து சென்றது. இந்த வாத்துக்களிடம் பிலிப்கா-

"வாத்துக்களே, வாத்துக்களே, கூச்சல் வேண்டாம்! தலைக்கொரு இறகு போட்டுச் செல்லுங்கள், உங்களுடன் சேர்ந்து நான் என் தாய் தந்தையிடம் பறந்து செல்வேன், உங்களுக்குச் சன்மானம் தருவேன்!" என்று சொன்னான்.

இரண்டாவது திரளைச் சேர்ந்த வாத்துக்களும் தலைக்கொரு இறகு தந்தன.

பிறகு மூன்றாவது, நான்காவது திரள்களும் சென்றன, இவற்றைச் சேர்ந்த வாத்துக்களும் பிலிப்காவுக்கு தலைக்கொரு இறகைக் கொடுத்தன.

**(2ம் பக்கம் பார்க்க)**

## நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் 2008, கார்த்திகை மாதம் கடும் மழை வெள்ளம் மற்றும் சூறாவளி (நிஷா) காரணமாக தொழில் பாதிப்படைந்த அங்கத்தவர்கள், பணியாளர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் உட்பட்ட 300 பேருக்கு தலா ரூபா 2000 பெறுமதியான உலர் உணவுப் பொருட்களை நிவாரணமாக வழங்கியுள்ளது.

## புதிய இயக்குனர்சபை தெரிவு

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் 2009ம் ஆண்டுக்கான புதிய இயக்குனர்சபை தெரிவு மாவட்ட கூட்டுறவு அலுவலர் திரு.ஐ.நாகேஸ்வரன் அவர்கள் தலைமையில் இடம்பெற்றது. சிறப்பு பிரதிநிதியாக கூட்டுறவு அலுவலர் திரு.இ.விஜயமோகனராஜா அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். புதிய இயக்குனர்சபை விபரம் வருமாறு,

தலைவர்-திரு.த.சிவலிங்கம், உபதலைவர்- திரு.க.மெய்ய ழகன், செயலாளர் திரு.அ.அமலோ ற்பவநாயகம், நிர்வாகசபை உறுப்பினர்களாக, திரு.செ.காந்தராசா, திரு.சி.சிவகுமார், திரு.மா.குணரத்தினம் திரு.க.துரைசிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## பணியாளர் ஓய்வூதிய நலத்திட்டம்

யாழ் மாவட்ட ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம் தனது உறுப்பினர்களுக்கு ஓய்வு காலத்தில் மாதாந்த ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தவதற்கான முன்னேற்பாட்டினை ஆரம்பித் துள்ளது. இதன் முதற்கட்ட நடவடிக்கையாக 01-01-2009 தை மாதம் தொடக்கம் ஒவ்வொரு உறுப்பினர்களிடமிருந்தும் மாதாந்தம் ரூபா 250 ஓய்வூதிய நிதியாக பெறவேண்டும் எனவும், ஒரு உறுப்பினரின் தொடர் சேவைக் காலத்தில் வருடம் ஒன்றிற்கு ரூபா 600 வீதம் அறவிட்டு மொத்த நிதியாக சங்கத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்றும் 16-01-2009ல் கூடிய ஓய்வுத்திட்ட செயற்குழுவும், இயக்குனர் சபையினரும் தீர்மானித்துள்ளனர்.

இத்திட்டத்திற்கு அமைவாக வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம்,வலிகாமம் கொத்தணி என்பன தமது பணியாளர்களிடமிருந்து மேற்குறிப்பிட்ட நிதியை பெற்று யா.மாவட்ட ப.ந.கூ.சங்கத்திற்கு அனுப்பியுள்ளமை குறிப்பி டத்தக்கது.

## பொதுச்சபை உறுப்பினர் பயிற்சி

தென்மராட்சிக் கொத்தணியின் பொதுச்சபை உறுப்பி னர்களுக்கான பயிற்சி எதிர்வரும் 30-01-2009ல் கொத்தணி கூட்ட மண்டபத்தில் தலைவர் கி.பூபாலசிங்கம் தலைமையில் மு.ப.10.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சியில் சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ.சங்க இயக்குனர்சபை உறுப்பினர்களும் கொடிகாமம் ப.தெ.வ.அ.கூ.சங்க இயக்குனர்சபை உறுப்பினர்களும் கலந்துகொள்ள உள்ளனர்.

இப்பயிற்சி நெறியின் விரிவுரையாளர்களாக கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் இ.விஜயமோகனராஜா, சமாச கல்வி உத்தியோகத்தர், அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்க கல்வி உத்தியோகத்தர், கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்க கல்வி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## கோபத்தை கட்டுப்படுத்திக் கொள்ள 10 வழிகள்

1. கோபத்தின் முக்கிய காரணியான வெறுப்பை கைவிடுங்கள்.
2. கோபத்தை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை தவிர்த்திடுங்கள்.
3. அவசரம் ஒருபோதும் வேண்டாம்.
4. நேரம், மேம்பாடு, சுயகட்டுப்பாட்டை கடைப்பிடியுங்கள்.
5. செய்யும் வேலையை நேசத்துடனும், நேர்மையுடனும் குழப்பமில்லாமலும் செய்யுங்கள்.
7. கோபம் வருகிற சூழ்நிலையில் வாயைப் பொத்திக் கொள்ளுங்கள்.
8. ஆன்மீக ரீதியில் மனதை செலுத்துங்கள். இது உங்களை மகிழ்ச்சியாகவும், அமைதியாகவும் வைத்திருக்கும்.
9. கோபத்தின்போது ஆழமான பெருமூச்சு விடுங்கள்.
10. எவ்வளவு கோபம் ஏற்படுகிறதோ அதைப் பொறுத்து 1 முதல் 100 வரை எண்களை எண்ணிவிடுங்கள்.


**எமது உற்பத்தி சேவைகள்**

- கள் உற்பத்தி.
- பதநீர் உற்பத்தி.
- போத்தல் கள் உற்பத்தி.
- சுவையுணவு உற்பத்தி.

**வாடகைச் சேவைகள்**

- பந்தல்.
- பிளாஸ்ரிக் கதிரைகள்.
- தண்ணீர்த் தாங்கிகள்.

**வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்[வ-து]**

பதிவு இல: ஜே/1606 பதிவு திகதி: 11.04.1972

வேலணை கிழக்கு, வேலணை-01

**பொதுச் சேவைகள்**

- உள்ளூர், வெளியூர் தொலைபேசிச் சேவை.
- முன்பள்ளி கல்விச்சேவை.

**நலத்திட்டங்கள்**

- ஓய்வுபெறும் அங்கத்தவர்களுக்கான ஓய்வூதியத்திட்டம்.
- அங்கத்தவர்,பணியாளர் பிள்ளைகளின் கல்வி நல ஊக்குவிப்பு.
- கடன் வசதிகள்.

பனைவளம் பெருக்கி பயன்பல பெற்று
பனையும் நாடும் வளம் பெறட்டும்!


இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு இல.52, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2009ம் ஆண்டு ஜனவரி மாதம் வெளியிடப்பட்டது.